செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட தொழில் முனைவோர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சென்னை மண்ணடியில் அமைந்துள்ள காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையை பார்வையிட்டு ஆவின் உபபொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும் பொதுமக்களுக்கு சென்றடையவும் அதிகாரிகளோடு ஆலோசனை மேற்கொண்டார். இந்த நிகழ்வில். இணை நிருவாக இயக்குநர் திருமதி. க.பொற்கொடி மற்றும் ஆவின் பொது மேலாளர் விற்பனை (பொறுப்பு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி!

ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது!

திருவள்ளூர், ஆக. 23

'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி திருவள்ளூர் மத்திய மாவட்டம் தி.மு.க. இளைஞரணி சார்பில் முன்னாள் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தலைமையில் 25.08.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆவடி அடுத்த திருமுல்லைவாயில் எம்.எஸ்.கே. டைமன் மஹால் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ் குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், தெ.பிரியாகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இப்பேச்சுப் போட்டியில் நடுவராக பேராசிரியர் சுப. வீரபாண்டியன், கவிஞர் மனுஷ்யபுத்திரன், கோவை சம்பத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே. ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்கிறார்கள்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் ம.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், மேயர் உதயகுமார், பேபி சேகர், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன், டி.ராமகிருஷ்ணன், சே.பிரேம் ஆனந்த், என்.இ.கே.மூர்த்தி, ஜி.ஆர்.திருமலை, தி.வை. இரவி, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி, வி.அம்மு, உஷாராணிரவி, ஜெயசீலி ஜெயபாலன், பரமேஸ்வரி கந்தன், எம்.பர்க்கத்துல்லாகான், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் ஜி.துர்கா பிரசாரத் நன்றி கூறுகிறார்.

9 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக. 23 –

தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூர், அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது.

இதேபோன்று வேலூர், திருவள்ளூர், கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், தமிழ்நாட்டில் இடி, மின்னலுடன் பரவலாக மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



மக்கள் தொகைக் கணக்கெடுப்பை எடுக்கவேண்டியது ஒன்றிய அரசே!

2021-ஆம் ஆண்டிலேயே எடுக்க வேண்டிய கணக்கெடுப்பை இன்னும் எடுக்காதது ஏன்?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.23-

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பை (சென்சஸை) எடுக்கவேண்டியது ஒன்றிய அரசே என்பதுதான் அரசமைப்புச் சட்டத்தின் நிலை. 2021 ஆம் ஆண்டிலேயே ஒன்றிய பி.ஜே.பி. அரசு எடுக்க வேண்டிய சென்சஸை, இது வரை எடுக்காதது ஏன்? ஜாதி உள்பட மக்கள் தொகைக் கணக்கெடுப்பை எடுத்தால் தான் சமூகநீதி காப்பாற்றப்பட முடியும். எல்லோரும் ஒன்றிணைந்து ஒன்றிய அரசின் கதவைத் தட்டுவோம் - மாநில அரசைக் குறைகூறுவது வெறும் அரசியலே என்று அறிக்கை விடுத்துள்ளார் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள்.

அவரது அறிக்கை வருமாறு:

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நாட்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒன்றிய அரசு நடத்தியாக வேண்டும் என்பது இந்திய அரசமைப்புச் சட்ட விதிகள் படியான ஆணையாகும்.

2011-இல் எடுக்கப்பட்ட இந்திய மக்கள் தொகையில் ஜாதிப் பிரிவும் கேட்கப்பட்ட நிலையில், அதை சரிவர பதிவு செய்யாததமையால், முந்தைய ஆயிரக்கணக்கான ஜாதிகள் சில லட்சங்களாகி விட்டன என்பது போன்ற தவறான (ஊதல்கள்) குறிப்புகளால் அந்தக் கணக்கெடுப்பை வெளியிடவில்லை என்று கூறப்படுகிறது.

2021-இல் பா.ஜ.க. ஆட்சியில் (மோடி ஆட்சி) இதை அடுத்த பத்தாண்டு கணக்கெடுப்பு - என்ற முறையில் நடத்தியிருக்க வேண்டும்.

கரோனா (கோவிட்-19) முதலியவற்றினால் அதை நடத்தாமல், அதைச் சாக்காகக் கூறி, அரசு தள்ளிப் போட்டுக்கொண்டே வந்த நிலையில், இந்த 3 ஆண்டுகள் தாமதத்திற்குப் பிறகாவது இப்போது அப்பணியைத் தொடங்கவேண்டியது அரசமைப்புச் சட்டப்படியும் முக்கியமானதாகும். சமூகநீதி செயலாக்கத்திற்கு அடிப்படைத் தேவையான புள்ளி விவரமும் சரியான முறையில் பெறப்படும். எனவே, இந்த 10 ஆண்டுகள் சென்செஸ் முக்கிய தேவையாகும்.

"ஜாதி" என்ற பிறவி பேதமுறை உலகில் வேறு எங்கும் இல்லாத ஒரு கொடுமை என்பதாலும், பெரும்பான்மையினரான "கீழ்ஜாதியார்" - ஒடுக்கப்பட்ட வகுப்பினர்கள் கல்வி, உத்தியோக, உரிமைகளை இழப்பதோடு, தங்களது மானம், மரியாதையையும் இதன்மூலம் இழந்து, விலங்கினத்தைவிடக் கீழான பிறவிகளாகவே ஹிந்து மத சாஸ்திரப்படி, சமூக வழக்கப்படி இன்னமும் தீண்டாமை, பாராமை, நெருங்காமை, படிக்காமை - இன்னல்களிலிருந்து மீள சமூகநீதி, இட ஒதுக்கீடு ஒரு வழிமுறையாக உள்ளதால், ஜாதிவாரி கணக்கெடுப்பு இன்றியமையாததாக உள்ளது.

ஜாதியைக் கேட்டு, அந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பதியாததினாலேயே, ஜாதி ஒழிந்துவிடுமா? இது ஒரு 'நெருப்புக்கோழி' மனப்பான்மை - ஏமாற்று வித்தையல்லவா?

இந்தப் பிறவிக் கொடுமை - பேதம் - பாதிப்பிலிருந்து அந்த மக்களை மீட்கவே ஒரு உபாயம் - இட ஒதுக்கீடு, அரசமைப்புச் சட்டம் அளிக்கும் சமூகநீதி!

மாநில அரசுகள் அதற்கான இட ஒதுக்கீடு சட்டங்களை செய்து, செயல்படுத்தி வருகையில், ஆதிக்க ஜாதியினர், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்குகளைப் போட்டு, விசாரணைக்கு அவை வரும் போது, 'Quantifiable data' வின் படி கணக்கெடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் இதற்கு எங்கே என்று ஒரு குறுக்குக் கேள்வி கேட்டு, அம்முயற்சிகளை - சமூகநீதிச் சட்டங்களை - கைக்கெட்டியவை வாய்க்கெட்டாதவைகளாக ஆக்கி விடுவதாலேயே, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஜாதி பதிவு செய்யப்படவேண்டியது - அவசர அவசியமாகும்.

அதற்குரிய காரணங்கள்,

1. "ஜாதி" என்பது யதார்த்தம் - நடைமுறையில் உள்ளது.

2. பிறந்ததிலிருந்து சுடுகாடு, இடுகாடு வரை மட்டுமல்ல, அதற்கும் தாண்டியும் கூட ஜாதி ஆளுமை செய்கிறது!

3. 'ஜாதி' இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஒழிக்கப்படவே இல்லை என்பதோடு, 18 இடங்களில் அரசமைப்புச் சட்டத்தில் அந்த Caste என்ற சொல் இடம்பெற்றுள்ளது!

(ஆதாரம்: மேற்கோள் - கருநாடக ஹேவனூர் கமிஷன் அறிக்கை)

தமிழ்நாட்டிலும், ஜாதி வாரிக் கணக்கெடுப்பை திராவிடர் கழகமும், திராவிடர் இயக்கமும், 'திராவிட மாடல்' ஆட்சியும், முதலமைச்சரும், கூட்டணிக் கட்சிகளும், சமூகநீதிப் போராளிகளும் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக காங்கிரஸ் கட்சியின் இளந்தலைவரும், மக்களவையின் இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தியும், காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி சோனியா, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

மைனாரிட்டி அரசாக மூன்றாவது முறை ஒன்றியத்தில் பொறுப்பேற்றுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) - அதற்கு ஆதரவளிக்கும் கட்சிகளில் முக்கியமானதான நிதிஷ்குமாரின் அய்க்கிய ஜனதா தளம், சிராக் பஸ்வானின் லோக் தளக் கட்சி போன்றவையும் வற்புறுத்தி வருகின்றன.

எனவே, இந்தக் குரல்களுக்கும் காது கொடுத்து, உடனடியாக மேலும் காலதாமதம் செய்யாமல், மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்திட, ஒன்றிய மோடி அரசு முன்வரவேண்டியது அரசமைப்புச் சட்டப்படி உள்ள முக்கிய கடமையாகும்.

ஏற்கெனவே ஒன்றிய மற்றும் மாநிலங்களில் ஜாதிப் பட்டியல்கள் உள்ளன. அவற்றில் எந்த ஜாதி என்று கேட்டால் போதும்.

புதிது புதிதாக ஜாதிகள் முளைக்காது; தவறான தகவல் கொடுத்தால் கடும் நடவடிக்கை என்றும்கூட அரசு ஆணையிடலாம்.

இந்தக் கணினி யுகத்தில், பணிகளை விரைந்து செய்ய முடியும். எனவே, உடனே என்ன ஜாதி (Caste) என்று கேட்டு, அந்தக் கணக்கெடுப்பை ஒரு காலக்கெடுவுக்குள் (Time Bound) திட்டமாக முடிக்க ஒன்றிய அரசு முன்வரவேண்டும்.

ஒன்றிய அரசின் கதவைத் தட்டவேண்டும்!

தமிழ்நாடு தி.மு.க. அரசின் மீது குற்றம் சாட்டவே அரசியலில் தோற்றுப்போன சில தலைவர்கள், மாநில அரசை ஜாதி வாரிக் கணக்கெடுப்பை நடத்த வற்புறுத்திப் பேசுகின்றனர்.

முறையாக தட்டவேண்டிய கதவு அவர்களிடம். அவர்கள் இடம்பெற்றுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) ஆகும்.

கருநாடகாவில் 2015-ஆம் ஆண்டிலும், பீகாரில் 2023-ஆம் ஆண்டிலும் மாநில அரசுகள் செய்த ஜாதிவாரிக் கணக்கெடுப்பிற்கு எந்தப் பலனும் ஏற்படவில்லை என்பதைப் புரிந்த பிறகும், வற்புறுத்தவேண்டியது ஒன்றிய அரசைத்தான் - தாங்கள் ஆதரவு தரும் அந்தப் பிரதமர் மோடி தலைமையிலான அரசைத்தான் என்பதை உணரவேண்டாமா?

ஒன்றுபட்டுக் குரல் கொடுப்போம்!

சமூகநீதியாளர்கள் அனைவரும் - ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி என்ற அணி வேறுபாடு பார்க்காமல், சமூகநீதி என்ற இலக்கை அடைய, இந்தக் கோரிக்கையை ஒன்றிய அரசை நோக்கி வைத்துப் போதிய அழுத்தம் கொடுத்தால்தான் வெறும் 'கானல் நீர் வேட்டை' மாறி, காரியத்தில் செயலாக மலர முடியும்.

எனவே, ஒன்றுபட்டுக் குரல் கொடுப்போம்; கொடுக்க வேண்டும், வேண்டும் உடனடி ஒன்றிய அரசின் சென்சஸ் கணக்கு!

அதில் ஜாதிவாரிக் கணக்கெடுப்பு முக்கியம் - முதன்மையாகும் என்று முழங்கிட, மக்கள் மன்றம் கிளம்பட்டும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஜே.ஜே.எபினேசர் தலைமை ! ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை ! எம்.பி.ஆர்.ராஜன் வரவேற்புரை !

'47(அ) வட்ட இளைஞர் அணி! ஜெ.சி.பீட்டர் இல்ல புதுமனை புகுவிழா !

ஆர்.டி.சேகர் ,கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, ஆக.23

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 47(அ) வட்ட இளைஞரணி ஜெ.சி.பீட்டர், ஜெ.பி. ஸ்டெல்லா, ஆகியோரின் புதுமனை புகுவிழா நாளை (24.08.2024 சனிக்கிழமை) பகல் 12.30 மணியளவில் எண்.539, ஜே.ஜே.நகர், எப். தெரு, கொருக்குபேட்டை, சென்னை 21ல் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலை வகிக்கிறார். வட்ட செயலாளர் எம்.பி.ஆர்.ராஜன், வரவேற்புரையாற்றுகிறார். நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை எம். பாலு, க.முருகன் ஆகியோர் செய்துள்ளனர்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தலைமை வகிக்கிறார்.

இதில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.

பாலு(எ) முகமது அலி, ரா.சீனிவாசன், ரா.ராபர்ட், ஜெ.அருணா, மு.குமரன், ஜி.என்.ராகவேந்திரா, க.சுந்தரராஜன், பெ.வெங்கடேசன், பி.ஜக்கரய்யா, மாஸ்.டி.வெங்கடேசன், மு.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், ஜி.ஏழுமலை, எஸ்.எல்.சுந்தர், கே. தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், மண்டலக்குழுத் தலைவர நேதாஜி யு.கணேசன், இ.மணி மேகலை எம்.சி, இர.பொன்இளவரசன், டி.சங்கர், இ.ரவிக்குமார், என்.சுப்பராயன், என். பி.அஜித், எஸ்.தமிழரசு, எஸ். பாஸ்கர், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

இந்திய பட்டயக் கணக்காளர் கழகத்தின் தென்னிந்திய மண்டல குழு செங்கல்பட்டு மாவட்ட கிளையின் அடிக்கல் நாட்டு விழா ரூபாய் 13 கோடி செலவில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு தாம்பரம் சானடோரியம் ரயில் நிலையம் அருகில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ் ஆர் ராஜா எம்.எல்.ஏ., பெயர் பலகையை திறந்து வைத்தார்.